# சங்க கால மகளிர் விளையாட்டுகள்

# Sangam Age Women's Games

***சு. ஆறுமுகவடிவு***
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
ஸ்ரீ இராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர், இந்தியா

**S. Arumugavadivoo**
*Assistant Professor, Department of Tamil*
*Sri Ramakrishna College of Arts and Science*
*Coimbatore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*பண்டைக் காலம் முதல் இக்காலம் வரை விளையாட்டை விரும்பாதவர் எவரும் இலர். விளையாட்டுகள் எப்பொழுதும் முக்கிய இடங்களை பெறுகின்றன. சங்க இலக்கியங்களில் விளையாட்டுகள் பற்றிய செய்திகள் பல உள்ளன. சங்க கால விளையாட்டுகள் பொழுது போக்கிற்காக மட்டுமல்லாமல் மன மகிழ்ச்சிக்காகவும் உடல்நலம் பேணுவதற்காகவும் பல்வேறு விளையாட்டுகள் விளையாடி மகிழ்ந்தனர். சங்க கால மகளிர் விளையாட்டுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:***
*சங்க கால விளையாட்டுகள், உடல்நலம், மகளிர் விளையாட்டுகள், ஆடவர் விளையாட்டு, மன மகிழ்ச்சி*

## Abstract

*From ancient times to the present there is no one who does not like sports. Games always hold a prominent place. There are many references to games in Sangam literature. Various Games at the Sangam Age played not only for recreation but also for mental pleasure and health care. This article examines the women's sports of the Sangam Age.*

***Keywords:***
*Sangam Age Games, Health, Women's Games, Men's Sports, Mental Happiness.*

**Citation**
Arumugavadivoo, S. "Sangam Age Women's Games." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 7–13.

**விளையாட்டின் வகைகள்**

சங்க காலத்தில் விளையாட்டுகள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தன. அவர்கள் விளையாடிய விளையாட்டுகளை

- ஆடவர் விளையாட்டு
- மகளிர் விளையாட்டு

என இருவகையாக வகைப்படுத்தியுள்ளனர்.

**மகளிர் விளையாட்டுக் கொள்கைகள்**

சங்க காலத்தில் பெண்கள் ''வீட்டிற்குள் வளர்த்தல்'' இற்செறிதல் என்னும் நிலை இருந்தாலும் சிறுமியர் மற்றும் இளமகளிர் பல்வேறு விளையாட்டுகளை விளையாடினர்.

இளம்மகளிர் தம் தோழியர் கூட்டத்தோடு விளையாடுவதே அறம் எனப்பட்டது. அவ்வாறு விளையாடுவதால் உடலும் உள்ளமும் ஆக்கம் பெறும். மாறாக வீட்டிற்குள் இருந்தால் அது அறம் ஆகாது. அதனால் ஆக்கமும் தேய்ந்து விடும் என்பதை,

**''விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது**
**இளையோர் இல்லிடத்து இற்செறிந் திருத்தல்**
**அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்என்''** (நற் 68: 1-3)

என்னும் நற்றிணை வரிகள் விளக்குகின்றது.

**மகளிர் விளையாட்டுகள்**

சங்க கால மகளிர் பல்வேறு விளையாட்டுகள் விளையாடினர் . அவ்விளையாட்டுகள் அவர் களின் உடலையும் உள்ளத்தையும் வளப்படுத்தின. அவை.

- புனல் விளையாட்டு
- வட்டாடுதல்
- பந்தாடுதல்
- கழங்காடுதல்
- ஊசலாட்டம்
- ஓரையாடல்
- வண்டலிழைத்தல்

போன்றவையாகும்.

**புனல் விளையாட்டு**

சங்க காலத்தில் புனல் விளையாட்டு மக்களிடையே சிறப்பு பெற்றிருந்தது, சங்க காலத்தில் ஆடவர் மகளிர் இருவரும் புனல் விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். இவ்விளையாட்டை ''களிநீராடல்'' என்று அழைத்திருக்கின்றனர்.

இவ்விளையாட்டு அருவியில் நீராடுதல், குளத்தில் நீராடுதல், ஆறுகளில் நீராடுதல், கடலாடுதல். என பல வகையில் உள்ளன.

உயர்ந்த மலைச் உச்சியிலிருந்து வெண்மையான துகிலைப் போல் வீழ்கின்ற வெள்ளிய அருவியில் நீங்காத விருப்பத்துடன் நீண்ட நேரம் விளையாடி பளிங்கைச் சொறிந்து வைத்தாற் போன்ற பரந்த சுனையில் நீராடி மகிழ்ந்து குளிர்ச்சி பொருந்திய மலையில் எங்கள் விருப்பம் போல் பாடினோம். பின்பு நீலமணி போன்று உள்ள எம் பின்பக்க முதுகிலே கிடந்த கூந்தலின் ஈரம் போகத்துவட்டி உலர வைத்தோம். எங்கள் கண்களெல்லாம் சிவந்து காணப்பட்டன.

***"அண்ணல் நெடுங்கோட்டு இழிரு தெள்நீர்***
***அவிர் துகில் புரையும் அவ்வெள் அருவி***
***தவிர் வுஇல் வேட்கையேம் தண்டாது ஆடிப்***
***பளிங்குசொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி***
***நளிபடு சிலம்பில் பாயம் பாடி***
***பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்தஎம்***
***பின்னிருங் கூந்தல் பிழிவனம் துவரி***
***உள்ளகம் சிவந்த கண்ணேம்" (குறி.பா 54 - 61)***

*என்று தலைவி நீரில் நீண்ட நேரம் விளையாடியதால் கண்கள் சிவந்ததை விளக்குகின்றது. மேலும்*

***தலைவன் பரத்தையோடு புனலாடியதை,***
***"சூதுஆர் குறுந்தொடிச் சூர் அமை நுடக்கத்த***
***நின்வெவ் காதலி தழீஇ நெருநை***
***ஆடினை என்ப புனலே" (ஐகுறு 71: 1-3)***

*என்னும் வரிகளின் மூலம் ஆடவரும் மகளிரும் புனலாடியதை அறிந்துக் கொள்ளலாம்.*

**வட்டாடுதல்**

*சங்க காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த விளையாட்டுகளில் வட்டாடுதல் ஒன்றாகும். வட்டாடுதலை "வல்லாடுதல்" என்று அழைப்பதும் உண்டு. வட்டு என்றால் திரட்சியான சூதாடும் கருவியாகும். இவ்வட்டாட்டமானது காய்களை நகர்த்தி விளையாடுவதாகும். இவற்கென தனி கட்டம் வரைந்தனர்.*

*பழைமையான அழகிய காட்டிலே பளிங்கு போன்று விளங்கும். உயர்ந்த பெரிய பாறைகளின் மேலேக் கி டக்கும் நெல்லி மரத்தின் பல காய்கள் கிடக்கும் அதனை சிறுமியர்களும் சிறுவர்களும் வட்டாடச் சேர்த்து வைத்து கழங்குகளைப் போல விளையாடுவதை,*

***"முளித்த ஓமை முதையல்அம் காட்டு***
***பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி***
***மோட்டு இரும்பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப" (அகம் 5: 8 - 10)***

*சிறுவர்களும் சிறுமியர்களும் வட்டாடினர் என்பதை அகநானுற்று பாடல் வரிகளின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.*

*முன்பு நரைத்த முதியவர் வட்டுகாயை இடுதலால் பள்ளமான அவ்விடத்தை,*

***"நரைமூ தாளர் நாய்இடக் குழித்து***
***வல்லின் நல்அகம் நிறைய" (புறம் 52: 14 - 15)***

*என்னும் வரிகளின் மூலம் வயதான மகளிரும் வட்டாடுதலை விளையாடினர் என்பதை அறிந்துக் கொள்ள முடிகிறது மேலும்*
*வேப்பமர நிழலில் கல்லாச் சிறுவர் கள் நெல்லி வட்டாடியச் செய்தியை*

***"பொரிஅரை வேம்பின் புள்ளி நீழல்***
***கட்டளை அன்ன வட்டரங்கு இழைத்துக்***
***கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டு ஆடும்" (நற் 3: 2 - 4)***

*காட்டுப் பகுதியில் உள்ள வேப்பமரங்களின் நிழல்களில் கோடுகளையிட்டு நெல்லிக்காயைக் கொண்டு சிறுவர் கள் வட்டாடுவதை இவற்றின் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.*

**பந்தாடுதல்**

*பந்தாடுதல் ஆடவர் மகளிர் இருவருக்கும் மன மகிழ்ச்சியைத் தரக்கூடிய விளையாட்டாக உள்ளன. பெருபாலும் மகளிரே இவ்விளையாட்டை விளையாடினர்.*

*இவ்விளையாட்டு வீட்டிற்கு வெளியிலும் முற்றத்திலும், மாடத்திலும், மணல் வெளியிலும், நீரிலும் விளையாடப்பட்டது.*

*நீரில் விளையாடப்பட்ட பந்தாட்டத்தை நீர் ப்பந்தாட்டம் என்று அழைத்திருக்கின்றனர்.*

***ஆடவரும் மகளிரும் பந்தாடியதை***
***"கோதை பரிந்து வரிபந்து கொண்டோடி***
***நோதக்க செய்யும் சிறுபட்டி"*** ***(கலி 51: 3 - 4)***

*என்ற வரிகள் மூலம் மகளிர் பந்து விளையாடியதை ஆடவர் பந்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடி விளையாடுவதை அறிந்துக் கொள்ள முடிகிறது.*

*நூலால் கட்டப்பட்ட ஒருவகையான பந்தினை வைத்து விளையாடுவதை சங்க கால மகளிர் வழக்கமாக இருந்தது. மகளிர் வரிபந்தாடியதை,*

***"பீலி மஞ்ஞையின் இயலி கால***
***தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப உயர் நிலை***
***வாய்தோய் மாடத்து வரிபந்து அசைஇ"*** ***(பெரும்பாண் 331 - 333)***

*என்ற வரிகள் விளக்குகின்றன.*

*பந்தாடுதல் விளையாட்டை அன்றைய மகளிர் விளையாடுவதை தங்கள் வழக்கமாக கொண்டிருந்தனர். இதனை*

***"பந்துஆடு மகளிரின் படர் தரும்"*** ***(ஐ. கு நூ 295: 5)***

*என்ற வரிகள் விளக்குகின்றன. மேலும்*

***"செல்வத் தந்தை இடனுடை வரைப்பின்***
***ஆடுபந்து உருட்டுநள் போல ஓடி"*** ***(நற் 324: 6 - 7)***

*அகன்ற இடத்தில் பந்தை காலால் உருட்டி ஓடியாடி விளையாடினர் என்பதை இவற்றின் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.*

**கழங்காடுதல்**

*மகளிர் விளையாட்டுகளில் கழங்காடுதலும் ஒன்றாகும். பருவ மகளிர் மிகவும் விரும்பி விளையாடிய விளையாட்டாகும்.*

*மகளிர் கைகளிலே அணிந்த பொன்வளையல்கள் அசைய மெத்தைப் போன்ற வெண்மணலில் பொன்னால் செய்த கழற்றிக்காயைக் கொண்டு பெண்கள் கழங்காடி மகிழ்ந்தனர் என்பதை*

***"கைபுனை குறுந்தொடி தத்த பைபய***
***முத்த வார் மணல் பொற்கிழங்கு ஆடும்"*** ***(பெரும்பாண் 334 - 335)***

*என்ற வரிகள் மணல் வெளியில் மகளிர் கலங்காடியதை விளக்குகின்றது.*

*குளிர்ந்த வெண்பொருநை ஆற்றின் வெண்மணல் சிதைய திண்ணை போல் அமைந்த மணல்மேட்டில் பொன்னாலான கழங்கினை வைத்து மகளிர் விளையாடியதை,*

***"செறிஅரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்***
***பொலம்செய் கழங்கின் தெற்றி ஆடும்***
***தண்ஆன் பொருநை வெண்மணல் சிதைய"*** ***(புறம் 36: 3 - 5)***

*பொன்னால் செய்யப்பட்ட கழங்கினை வைத்து கழங்காடியதை இவற்றின் மூலம் அறிந்துக் கொள்ளலாம். மேலும்இ*

***"கூரை நன்மனைக் குறுந்தொடி மகளிர்***
***மணல்ஆடு கழங்கின்"*** *(நற் 79: 2 - 3)*

*கூரையை உடைய நல்ல வீட்டில் அமைந்த முற்றத்தில் சிறிய தொடி அணிந்த மகளிர் பரப்பிய மணற்பரப்பில் கழங்காடினர் என்பதை இவற்றின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.*

**ஊசலாட்டம்**

*இளம் மகளிர் ஆடும் விளையாட்டுகளில் ஊசலாட்டம் முதன்மையானது. மரக்கிளைகளில் கயிற்றினை அல்லது கொடிகளைக் கட்டி அதிலமர் ந்து ஆடி விளையாடுவது ஊசலாட்டமாகும்.*

*மகளிர் தினைப்புனத்திற்கு அருகே ஊஞ்சலில் ஏறி ஆடுவதும் ஆடவர் ஊஞ்சலை ஆட்டிவிடுவதையும்*

***"- - - - - - ஓம்பும் புனத்துஅயல்***
***ஊசல் ஊர் ந்துஆட ஒருஞான்று வந்தானை***
***ஐய சிறிது என்னை ஊக்கி எனக்கூறத்***
***தையால் நன்றுஎன்று அவன்ஊக்க"*** *(கலி 37: 13 - 16)*

*என்ற வரிகள் விளக்குகின்றன.*

*தாழை விழுதால் ஆகிய ஊஞ்சலில் மகளிர் வினையாடுவதை*

***"- - - - - - - - தண் தாழை***
***வீழ்ஊசல் தூங்கப் பெறின்"*** *(கலி 131: 10 - 11)*

*என்ற கலித்தொகை வரிகளின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.*

*பொன்னெறி மாலையும் கழுத்தில் அசைந்தாட, கருமையான பனைநாரினால், திரித்த கயிற்றைப் பிணித்து தொங்கவிட்ட ஊஞ்சலில் ஏறி புப்போன்ற கண்களை உடைய தோழியர் அவ்வுஞ்சலை ஆட்டவும் ஆடாதவளாய் அவ்விடம் விட்டு நீங்கிப்போகுதலை,*

***"வாடா மாலை துயல்வர ஓடிப்***
***பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்***
***புங்கண் ஆயம் ஊக்க ஊங்கள்"*** *(நற் 90: 5 - 7)*

*என்ற வரிகளின் மூலம் தோழியருடன் இளம் மகளிர் ஊஞ்சலாடுவதை இவற்றின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.*

**ஓரையாடல்**

*சங்க கால இளம் மகளிர் விளையாடிய விளையாட்டுகளில் ஓரை ஒன்றாகும். ஓரை என்றால் ஒலித்தல் என்பதாகும். ஆரவாரம் எழுமாறு ஆடப்படும் இவ்விளையாட்டை "அலவனாட்டல்" என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.*

*ஓரையாடுதல் விளையாட்டு என்பது கடற்கரைப் பகுதி மற்றும் ஆற்றங்கரைகளில் விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டிற்கு ஆமைஇ நண்டு ஆகியவற்றைக் கொண்டு ஆடினர்.*

*கடலலை மோதலால் பரவும் மணலை உடைய கடற்கரை மாடத்தில் நண்டுகளைப் பிடித்து விளையாடுவதை,*

***"உரவுக் கடல் பொருத விரைவுமணல் அடைகரை***
***ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட"*** ***(கு.தொ 316: 4 - 5)***

*என்ற வரிகளின் விளக்கின்றன.*

*கடலில் குளித்து மகிழ்ந்திருக்கும் நீரொழுகும் கூந்தலையுடைய ஓரை என்னும் விளையாட்டை ஆடும் மகளிருக்கு அஞ்சி கடல் அலை நுரைகளிலிருந்து வந்து விழும் ஈரம்படிந்த நண்டானது கடலுக்குள் விரைந்தோடுவதை*

***"- - - - - - - நீர் வார் கூந்தல்***
***ஓரைமகளிர் அஞ்சி ஈர் ஞெண்டு***
***கடலில் பரிக்கும்"*** ***(கு.தொ 401: 2 - 4)***

*ஓரை விளையாடும் மகளிருக்கு அஞ்சி நண்டானது கடலுக்குள் ஓடுகின்றன.*

**வண்டலிழைத்தல்**

*வண்டல் மணலால் ஒரு பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழ்ந்து விளையாடும் விளையாட்டிற்கு வண்டலிழைத்தல் என்று பெயர்.*

*பசுமையான அவலை இடித்த கரிய உலக்கையை நல்ல கதிர் களை உடைய நெல் வயல்களின் வரப்பில் வைத்து விட்டு ஒளிமிக்க வளையலை அணிந்த மகளிர் வண்டல் விளையாட்டை விளையாடியதை*

***"பாசல் இடித்த கருங்காழ் உலக்கை***
***ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி***
***ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்"*** ***(கு.தொ 238: 1 - 3)***

*இளம் மகளிர் வயல் பரப்பில் வண்டல் விளையாட்டை விளையாடுவதை இவற்றின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.*

*உப்பங்கழியில் புக்களைப் பறித்தும் கடற்கரைச் சோலையில் விளையாடித் தங்கியும் மணலில் வண்டல் பாவை செய்து விளையாடியதைஇ*

***"கழிக்புக் குற்றும் கானல் அல்கியும்***
***வண்டற் பாவை வரிமணல் அயர் ந்தும்"*** ***(அகம் 330: 1 - 3)***

*என்ற வரிகள் விளக்குகின்றன.*

*அழகிய அணிகலன் அணிந்த சிறுமியர் மணலிடத்து வண்டல் பாவையைச் செய்து விளையாடினர் என்பதைஇ*

***"நேர் இழை மகளிர் வார் மணல் இழைத்த***
***வண்டற் பாவை"*** ***(நற் 191: 2 - 3)***

*சிறுமியர் வண்டல் பாவை செய்து விளையாடியதை இவற்றின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.*

**முடிவுரை**

*மேற்கூறியவற்றின் மூலமாக சங்க கால மகளிர் விளையாடிய விளையாட்டுகளை பற்றி அறியமுடிகின்றன. சங்க காலத்தில் மகளிர் வாழ்வோடு இணைந்த விளையாட்டாகவும் பொழுதுபோக்கு விளையாட்டாகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தகூடியதாகவும் அமைந்தமையை பற்றி சங்க இலகியங்கள் தெளிவுப்படுத்துகின்றன.*

**துணைநூற் பட்டியல்**

1. *சங்க இலக்கியம் - எட்டுத்தொகை - அறிஞர் ச.வே. சுப்பிரமணியன்.*
2. *சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு - அறிஞர் ச.வே. சுப்பிரமணியன்.*

**References**

1. Sanga Ilakiyam - Ettuthogai - Arignar S.V. Subramanian.
2. Sanga Ilakiyam - Pattupattu - Arignar S.V. Subramanian